செய்திவெளியீடு எண்.11/2017 நாள்: 18.02.2017

**சென்னையில் முதன் முறையாக அனுமதியின்றி நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்தவர் பயன்படுத்திய மின் உபகரணம், சென்னைக்குடிநீர் வாரிய அதிகாரிகளால் பறிமுதல்.**

----

சென்னையில் முதன் முறையாக சென்னைக்குடிநீர் வாரியத்தின் அனுமதி பெறாமல் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்தவரின் மின் உபகரணங்களை (மோட்டார்) சென்னைக்குடிநீர் வாரிய அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னையில் வசிக்கும் எந்த நபரும் வீட்டு உபயோகம் தவிர வணிக அடிப்படையில் நிலத்தடி நீரை உறிஞ்சவோ, உரிய அனுமதியின்றி லாரி மூலம் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லவோ கூடாது என ஒழுங்குமுறை ஆணையம் வரையறுத்துள்ளது.

சென்னைக்குடிநீர் வாரியக் குழாய்கள் மூலம் வினியோகம் செய்யும் குடிநீரை சிலர் மோட்டார் மூலம் உறிஞ்சுவதாக வந்த புகார்களையடுத்து சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் அந்தந்த பகுதி பொறியாளர்களை சோதனையில் ஈடுபடுமாறு அறிவுறுத்தியிருந்தார்கள்.

மேலாண்மை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலுக் கிணங்க பகுதிப் பொறியாளர்கள் அந்தந்த பகுதிகளில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னைக்குடிநீர் வாரிய அதிகாரிகளால் புளியந்தோப்பு பகுதியில் சோதனை மேற்கொண்டபோது நேரு நகர் முதல் தெரு, புளியந்தோப்பு, சென்னை–12 விலாசத்தில் வசிக்கும் ஒரு நபர் சென்னைக்குடிநீர் வாரியத்தின் அனுமதி பெறாமல் நிலத்தடி நீரை அவருடைய வீட்டிலுள்ள இரண்டு கிணறுகளிலிருந்து எடுத்து 30 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் கேன்களில் புளியங்தோப்பு பகுதியில் விற்பனை செய்து கொண்டிருந்தது கண்டறியப்பட்டது. உரிய அனுமதியின்றி ஆணையை மீறி நிலத்தடி நீரை வணிக நோக்கத்திற்காக உறிஞ்சியதால் அவர் பயன்படுத்திய மின் உபகரணம் (மோட்டார்) ஆய்வு செய்த குடிநீர் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக்குடிநீர் வாரியம்